**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.211/2010</u>** **தேதி.07.04.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. மகாலட்சுமி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு 07.04.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கணேசன் |
| த/பெ. | : | பாஸ்கர் ரெட்டியார் |
| வயது | : | 47/2025 |
| தொழில் | : | தனியார் கம்பெனி |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | தாமரைப்பாக்கம் |
| வட்டம் | : | ஆற்காடு |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது</u>

2ம் வாதி சிவாஜி நாராயணன் இராணிப்பேட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த O.S.No.212/1993ன் சான்றிட்ட பிராது நகல் **பி.வா.த.சா.ஆ.1** ஆகும். மேற்படி O.S.No.212/1993ல் 09.07.1997 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.2** ஆகும். என் தந்தை பாஸ்கர ரெட்டியார் முனுசாமி ரெட்டி என்பவரிடமிருந்து 14.12.1970 அன்று கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு அலுவலக நகல் **பி.வா.த.சா.ஆ 3** ஆகும். என் தந்தை பாஸ்கர ரெட்டியார் சின்னகுழந்தை கவுண்டதர் என்பவரிடமிருந்து 29.12.1972 அன்று கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு அலுவலக நகல் **பி.வா.த.சா.ஆ 4** ஆகும். என் தந்தை பாஸ்கர ரெட்டியார் காந்தம்மாள் என்பவருக்கு 25.06.1977 கிரையம் செய்து கொடுத்த கியை பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு அலுவலக நகல் **பி.வா.த.சா.ஆ.5** ஆகும். 19.08.83ல் என் தந்தை பாஸ்கர ரெட்டியார் நாகராணி என்பவருக்கு சர்வே

எண்.44/1 யை கிரையம் செய்து கொடுத்தார். அந்த கியை பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு அலுவலக நகல் **பி.வா.த.சா.ஆ.** 6 ஆகும். 19.06.1975 ல் என் தந்தை பாஸ்கர ரெட்டியார் எத்திராஜ் என்பவரிடமிருந்து பெற்றார். அந்த கியை பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு அலுவலக நகல் **பி.வா.த.சா.ஆ.7** ஆகும். 07.01.1978 ல் என் தாயார் ராணி அம்மாள் கிரையம் பெற்றார். அந்த கியை பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு அலுவலக நகல் **பி.வா.த.சா.ஆ.8** ஆகும். தட்சிணாமூர்த்தி என்பவர் என் த்நதை பாஸ்கர ரெட்டியார் வகையறா மீது தாக்கல் செய்த E.P.No.555/87 in O.S.No.277/24 ல் தாக்கல் செய்த நிறைவேற்று மனுவின் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.9** ஆகும். 02.01.1964 தேதியிட்ட அனந்த நாராயண ஐயர் என்பவருக்கு என்னுடைய சித்தப்பா பத்ராஜல ரெட்டியாரும் அவர் மனைவியும் சேர்ந்து எழுதி கொடுத்த பாண்டின் அசல் (பைசல் செய்யப்பட்டது) **பி.வா.த.சா.ஆ.10** ஆகும்.**(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது).** 26.11.1953 ல் புருஷோத்தம ரெட்டியார் வகையறா அனந்த நாராயண ஐயருக்கு எழுதி கொடுத்த அடமான பத்திரம் (பைசல் செய்யப்பட்டது) **பி.வா.த.சா.ஆ.11** ஆகும். **(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது).** 14.11.1973 தேதியிட்ட ரங்கநாயகி அம்மாள் என்பவரிடமிருந்து என் தந்தை பாஸ்கர ரெட்டியார் கிரையம் பெற்ற பத்திரத்தின் அசல் **பி.வா.த.சா.ஆ.12** ஆகும். 26.03.2015 அன்று என்னுடைய தகப்பனார் என்னுடைய சகோதர் ரமேஷீக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் **பி.வா.த.சா.ஆ.13** ஆகும். **(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது தாவா தாக்கல் செய்தபின்பு தாக்கல் செய்யப்ட்ட ஆவணம் என்பதால்)** நிறைவேற்று மனு எண்.199/2002 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகல் **பி.வா.த.சா.ஆ.14** ஆகும். நிறைவேற்று மனு எண்.199/2002 ல்3 வது பிரதிவாதி ரமேஷ் இராணிப்பேட்டை சார்பு நீதிமன்றம் பிறப்பித்த சுவாதீனம் கொடுத்த உத்தரவின் நகல் **பி.வா.த.சா.ஆ.15** ஆகும். நிறைவேற்று மனு எண்.199/2002 ல் 3 வது பிரதிவாதி ரமேஷ் சுவாதீனம் எடுத்ததற்கான இராணிப்பேட்டை சார்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் நகல் **பி.வா.த.சா.ஆ.16** ஆகும்.

**(கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை:– ஒத்திவைக்கப்படுகிறது).**